**ARTICLE 06 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00021**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 27–31
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# தென்மாவட்ட படைப்பாளர்களின் படைப்புகளில் தாது வருட பஞ்சம்

## The Famine of the Dhathu Year in the Works of Writers from the Southern Districts

**சிவலிங்கம் இரா**[1,*]

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 600005, India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** சிவலிங்கம் இரா — sivaphd23@gmail.com
**ORCID:** சிவலிங்கம் இரா https://orcid.org/0009-0002-0299-1525

### Abstract

The southern district regions are revered as the ancient regions of Pandinadu. In these regions, literary figures have emerged from ancient times in the Nellai region and have rendered service to Tamil. In this regard, this region, which has also been an undeniable geographical area in the writing of Tamil Nadu’s history, is also renowned for having produced literature on the subject of the Dhathu Year famine that prevailed throughout the South Indian region. In this manner, this study explains the references to drought found in the two minor literary works, Panchalakshana Thirumuga Vilasam and Gandhimathiyammai Kalithurai Anthathi, which point to the Dhathu Year famine.

### ஆய்வுச் சுருக்கம்

தென்மாவட்டப்பகுதிகள் பழமையான பாண்டிநாட்டுப் பகுதியாக போற்றப்படுவனவாகும். அவற்றில் நெல்லை வட்டாரப்பகுதிகளில் பழங்காலந்தொட்டே இலக்கிய ஆளுமைகள் தோன்றி தமிழுக்கு தொண்டாற்றி வந்துள்ளனர். அவ்வகையில் தமிழக வரலாற்று எழுதியலில் மறுக்க முடியாத நிலப்பகுதியாகவும் அமைந்த இப்பகுதி தென்னிந்திய நிலப்பகுதி முழுமையும் நிலவியிருந்த தாது வருட பஞ்சம் பற்றிய பாடுபொருளைக் கொண்டு இலக்கியம் படைத்த புகழுக்கும் உரியதாகும். அவ்வகையில் தாது வருடப்பஞ்சத்தை சுட்டும் சிற்றிலக்கியங்களான பஞ்சலட்சண திருமுக விலாசம், காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி எனும் இரு நூல்களில் அறியலாகும் வறட்சிப்பற்றிய குறிப்புகளை இவ்வாய்வு விளக்குகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** தாது வருட பஞ்சம்; காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி; பஞ்சலட்சண திருமுக விலாசம்; புறநானூறு; பஞ்ச அறிக்கை; கரிசல் வட்டாரம்; நாஞ்சில் வட்டாரம்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** இரா, சி. (2026). தென்மாவட்ட படைப்பாளர்களின் படைப்புகளில் தாது வருட பஞ்சம். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

தமிழகத்தின் தென் மாவட்டங்கள் சங்க காலம் முதல் தற்காலம் வரை பல புலவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. வள்ளுவர், பாரதி, புதுமைப்பித்தன், சிதம்பர ரகுநாதன் வரை இன்றளவும் பல புலவர்களையும் எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்தியுள்ள நிலப்பகுதி இப்பாண்டிய தேசமே ஆகும். கரிசல் மற்றும் நாஞ்சில் நாட்டு வட்டார பகுதிகளை உள்ளடக்கிய தென்மாவட்ட இலக்கிய வட்டாரங்கள் தென்மாவட்ட இலக்கியப் புகழுக்கும் வளர்ச்சிக்கும் இலக்கிய பரம்பரை

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

உருவாக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. நவீன தமிழ் இலக்கிய சூழலில் தம் ஆளுமையைச் செலுத்திய பெரும்பான்மையான இலக்கியவாதிகள் பெரும்பாலும் கரிசல் மற்றும் நாஞ்சில் வட்டார இலக்கியவாதிகளாகவே இருந்தனர். மகாகவி பாரதியும், சிறுகதை மன்னரான புதுமைப்பித்தனும், முதல் சிறுகதைத் தொகுப்பிற்காக சாகித்திய அகாதெமி விருதுப்பெற்ற கு. அழகிரிசாமியும், வட்டார இலக்கியங்களில் மறுக்கவொன்னாத நிலையில் இருக்கும் கி.ராஜநாராயணனும், நாஞ்சில் நாடனும், ஆய்வுலகில் தனக்கென்று தனித்த முத்திரைப்பதித்த தொ.மு.சி. ரகுநாதன் அவர்களும் தென்மாவட்ட படைப்பாளர்களின் பட்டியலில் முன்னிலை வகிக்கின்றனர். இவ்விரு வட்டார இலக்கியங்களில் பண்பாட்டுப்பதிவுகளையும் நாகரிக வளர்ச்சியையும் தம் படைப்புகளில் பதிவுசெய்துள்ளனர். அவ்வாறான பதிவுகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பன்னிரண்டு ஆண்டுகாலம் தொடர்த்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கிய தாது வருட பஞ்சம் பற்றியக் குறிப்புகளைப் பெரும்பாலும் தங்கள் படைப்புகளில் பதிவு செய்தாலும், தனிப்பட்ட பஞ்ச கருப்பொருளைக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியங்கள் குறைவாகவே காணப்படுகிறது. அவ்வகையில் வில்லியப்ப பிள்ளை பாடிய பஞ்ச இலட்சண திருமுக விலாசமும், அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றிய காந்திமதியம்மை கலித்துறை அந்தாதியும் காட்டும் தென்னாட்டு தாதுவருடப்பஞ்சத்தை பற்றி இலக்கிய பதிவுகளைக்கொண்டு நெல்லை வட்டார தாது வருடப் பஞ்சத்தைப்பற்றியக் குறிப்புகளை இங்கு காண்போம்.

## தாது வருட பஞ்சம்

சங்க காலத்தில் குறுகிய வேனிற் பருவகாலத்தில் தோன்றும் பாலைப்படிமக் காட்சிகளிலிருந்து நானிலமும் பாலையாக தன் வளம் குன்றி மாறுபாடடையும் காட்சிகளைக் காண முடிகின்றன. ஆனால் நீண்ட கால வறட்சியின் தோற்றம் பற்றிய குறிப்புகளும் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. சங்கப் பாடல்களில் பெரும்பானமையானவை பாலைப் பாடல்களே ஆகும். பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படை தவிர்த்த ஏனைய நான்கு ஆற்றுபடை நூல்களும் ஆற்றுப்படுத்தும் கூத்தன், பாணன் மற்றும் பொருநனின் வறுமை நிலையினை குறிப்பிடுகிறது. அவ்வகையான வறட்சி வறுமைக்கான காரணத்தைப் புறநானூற்று பாடல் ஒன்று

> “வெள்ளி தன்புலத்து உறைய விளைவயல்
> பள்ளம் வாடிய பயன்இல் காலை” (புறம்.388:1-2)

என்று பண்ணன் எனும் வேளிடம் பரிசில் கேட்கப் புகும் பாணன், சுக்கிரன் எனும் வெள்ளி கோளின் தோற்றத்தால் உண்டான நீண்டகால வறட்சியைப் போக்கும் பொருட்டு நல்ல விளைச்சலுடைய நெல் வயல்களைக் கேட்பதாக அமைந்த மேற்கண்ட பாடாண் திணைப்பாடலில் சுட்டப்படும் வெள்ளி எனும் கோள் நிலை நீண்ட காலத்திற்கு மழைக்குன்றி நீர்நிலை வற்றி வேளாண் தொழில் பாதிப்படையும் செய்தியைப் பதிவு செய்கிறது. சிலம்பில் கண்ணகி மதுரையை எறித்தபின் நெடுங்காலம் மழையின்றி மதுரை வறட்சி எய்திய நிலையையும், நாலடியார் பாடிய சமண முனிவர்களும் நெடுநீண்ட பஞ்சத்தின் காரணத்தினாலே பாண்டிநாடு

புகுந்தது பற்றியும் இலக்கிய தோற்றம் பற்றிய கதையாடல்களின் வழியும் அறிய முடிகிறது.

சிவகங்கை மாவட்ட பிரமனூரில் மிராசுக் கணக்கராக பணியாற்றிய வில்லியப்ப பிள்ளை பாடிய பஞ்ச இலட்சண திருமுக விலாசமும், திருநெல்வேலி மாவட்ட தச்சநல்லூரில் பிறந்த முன்சீப் கோர்ட் எழுத்தராக பணிசெய்த அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றிய காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி ஆகிய இரு நூல்களும் தமிழ் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய தாது வருட பஞ்சத்தை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட இரு பிரபந்தங்கள் ஆகும். ஆங்கிலேயர்களின் ஆட்சியில் தோன்றிய இக்கொடும் பஞ்சத்திற்கு காரணமாக கிரகங்களின் நிலையையும் வெள்ளி எனும் சுக்கிரன் கோளின் கிரகப்பார்வையையும் காரணங்களாக கொள்வோர் ஒருபுறமிருக்க, ஆங்கிலேயர்களின் முறையற்ற ஆட்சியும் மிகப்பெரிய காரணமாக அமையும் பான்மையை தொ. மு. சிதம்பர இரகுநாதன் அவர்கள் தாம் பதிப்பித்த காந்திமதியம்மை கலித்துறை அந்தாதியின் முன்னுரையில் **‘இந்தியாவை நாகரிகப் படுத்துவதாகச் சொல்லி வந்த ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டு கிராமங்களை அபிவிருத்தி செய்யவோ, பாசன வசதிகளைச் செய்து தரவோ போதிய அக்கறை காட்டவில்லை. மாறாக, அவர்கள் இந்திய விவசாயிகளை மேலும் மேலும் ஓட்டாண்டிகளாக்குவதிலேயே கவனம் செலுத்தினார்கள்’** (ப.3) என்கிறார். அவ்வாறான ஆட்சிமுறையில் நடந்த செயல்களாக கள்ளச்சந்தை, கொள்ளை லாப வியாபரங்களும், வரிச்சுமையும் நிலவி வந்ததாக சுட்டுகிறார். அக்காலப்பகுதியை 1876 முதல் 1890 வரையிலான இடைவெளியை பஞ்ச காலமாக சுட்டுகிறார் தோ.மு.சி அவர்கள் மழையின்றி பஞ்சம் தலைவிரித்தாடிய காலத்தையும், மீண்டும் மழைப்பெய்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிய காலத்தையும் அப்போதைய ஆங்கிலேயர்களின் வரிச்சுமை ஆகியவற்றையும் கொண்டு தம் ஆய்வு முன்னுரையில் சுட்டுகிறார். ஆனால் பஞ்ச காலம் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் நீடித்திருந்த செய்தியை அழகிய சொக்கநாத பிள்ளை அவர்கள்

> “அரசற்ற ஆக்கினை உண்டோ? இது முதலாக மழை
> வருஷித்துப் பூமிக் செழிக்கச் செய்து, அம்பல வாணரிடம்
> பரிசுற்ற காந்திமதி அம்மையே! இந்த பன்னிரண்டு
> வருஷத்துப் பஞ்சத்தை நீக்கி, அன்பாய் எம்மை வாழ்விப்பையே” (காந்திமதி. 90)

என்று தாது வருட பஞ்சம் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்த செய்தியை தம் நூலில் பதிவு செய்துள்ளார். பஞ்சத்தால் அடைந்த துயர்களை வரிசைப்படுத்தி நெல்லை காந்திமதியம்மையிடம் முறையிட்டு வேண்டிக்கோள்வதுபோல அமைந்த இவ்வந்தாதி நூலானது நூறு பாடல்களைக் கொண்டது முதலில் இடம்பெற்ற தொண்ணூறு பாடல்களும் பஞ்சத்தைப் பற்றிய முறையீடுகளையும் இறுதி பத்துப் பாடல் அம்மைக்கு நன்றி சொல்லும் விதமாகவும் அமைந்துள்ளது. அப்பஞ்ச காலக்கட்டத்தில் நெல்லைப் பகுதி மட்டுமல்லாது மெட்ராஸ் மாகாணமாக கருதப்பட்ட தென்னிந்தியா முழுவதுமே இப்பஞ்சத்தின் கோரப்பிடிக்குள் சிக்கியிருந்த செய்திகள் பற்றி ஆங்கிலேய பஞ்ச கமிஷன் அறிக்கைகள் அறிவுறுத்துகின்றன. அவ்வாறான அறிக்கைகளை வில்லியம் டிக்பி எனும் ஆங்கிலேய பத்திரிகையாசிரியர் தாம் எழுதிய 1877 தாது

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

வருடப்பஞ்சம் எனும் நூலில் ***"திருநெல்வேலியின் அருகே பஞ்சத்தின் பாதிப்பு குறைவாக இருப்பதாக் கருதப்பட்ட இடங்களில் அந்த மாவட்ட ஆட்சியரான திரு. மேக்குஹே முப்பது கிராமங்களைச் சென்று ஆய்வு செய்ததில், அங்கிருக்கும் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி உணவிற்காக அலைய ஆரம்பித்துவிட்டதாகக் கூறுகிறார். அருகில் இருக்கும் காடுகளில் கிழங்குகளைத் தோண்டுவதன் மூலம் வாழ்ந்ததாகத் தேரிவிக்கிறார்.***

***திரு. மேக்குஹே தனது இந்தப் பயணத்தில் நூறு பேருக்கும் மேலான மக்கள் இதுபோன்று உடல் நலத்திற்கு உகந்தது இல்லாத கிழங்குகளைத் தோண்டித் தின்பதைப் பார்த்ததாகப் பதிவு செய்கிறார். எறும்புப் புற்றுகளில் இருந்து, ஆறு முதல் எட்டு மணி நேரம் அலைந்து சேகரிக்கப்பட்ட ஒரு கையளவு தானியத்துடன் திரும்பிய பத்து பெண்களைத் தான் பார்த்ததையும் பதிவு செய்கிறார். பஞ்சத்தின் பாதிப்பு ஆரம்பித்த நாட்களிலேயே கிழக்குலக மக்கள் உணவை பாதியாகக் குறைத்துக் கொள்கின்றனர். அதாவது ஒரு வெளை உணவு மட்டுமே தினமும் அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு முறை உண்ணுகின்றனர். ஜனவரி 1877 லேயே திரு. மேக்குஹே, கிராமங்களில் இது போன்று வாழ்ந்தவர்களைப் பார்த்ததாகக் கூறுகிறார்"***(1877- தாது வருட பஞ்சம், ப. 26-27) இவ்வாறாக பஞ்ச கமிசன் அறிக்கைகள் தயாரிக்கும் பொழுது நெல்லை மாவட்டத்தின் பஞ்ச காட்சியையும் பதுவு செய்கின்றனர்.

மேற்கூறப்பட்ட புறநானூற்றுப்பாடல் கூறும் வெள்ளி கோளின் நிலையை வில்லியப்ப பிள்ளை தம் பஞ்சலட்சண திருமுக விலாசத்தில்

"……….. …… .. ……… சீருதவு (பஞ்ச.147)
மாதித்தனே முதலா யற்புத நவகிரகங்கள்
வாதித் தொன்றோடொன்று மாறுபட்டே – யாதித்தன் (பஞ்ச.148)
தொன்னீர்மை யாமழைக்கோட் சுக்ரனைப் பின்னாகவிட்டு
முன்னேறிச் செல்லு முறியாலும்" (பஞ்ச.149) - என்று

பஞ்ச லட்சண திருமுக விலாசக் கண்ணிகளில் குறிப்பிடுகிறார்.

இவ்விரு நூல்களும் தென்மாவட்ட மக்கள் தாது பஞ்சத்தால் உற்ற கொடுமைகளையும் ஆங்கிலேய ஆட்சுக்கொடுமை, வியாபாரிகள் செய்த மோசடிகள் என பலவும் பேசப்பட்டுள்ளது. சுமார் ஐம்பது இலட்ச மக்களின் உயிர்களைப் பலிக்கொண்ட இத்தாதுவருடத்தில் கஞ்சிதொட்டிகள் திறக்கப்பட்டன. அக்கஞ்சித்தொட்டிகளைத் திறந்து கிராமங்களில் இருந்த கம்மாய், ஏரி மற்றும் குளங்களைத் தூர்வாறும் பல பணிகளையும் ஆங்கிலேய அரசு மேற்கொண்டது. மக்கள் கொடும்பாவி சுமந்து பஞ்சத்தைப் போக்க வேண்டி இழுத்தனர். மழைக்கஞ்சி சுமந்து வழிப்பாடுகளை நடத்தினர். இன்றளவும் தமிழகத்தின் பல கிராமபுறங்களில் மழைக்கான இவ்வழிபாடுகள் நடப்பதைக் காணமுடிகின்றது. ஆனால் தென்மாவட்டங்களில் நிலவிய பஞ்சத்தினை பதிவு செய்யும் இலக்கியங்களாக மேற்கண்ட பஞ்சலட்சண திருமுக விலாசமும், காந்திமதியம்மை கலித்துறை அந்தாதியும் ஆகிய இரண்டும் காணப்படுகிறது. கி.ராவும் தனது கோபல்ல கிராமம் புதினத்தில் விட்டில் பூச்சி படையெடுப்பையும் அதனால் ஏற்பட்ட பஞ்சத்தையும் பதிவிட்டுள்ளார்.

## முடிவுரை

தமிழகம் முழுமையும் காலந்தோறும் பலவகையான பஞ்சங்கள் தோன்றி பல புலம்பெயர்வுகளும் காணப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுக்கான வரலாற்று ஆதாரங்கள் மிகவும் குறைவே. இவ்வகையான வறட்சி மற்றும் புலம்பெயர்வுக் குறிப்புகளே வறட்சிக்கு மேலாண்மைக் காரணிகளையும், புலம்பெயர்வால் கைவிடப்பட்ட நிலப்பகுதிகளை பற்றிய குறிப்பும் அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய அகழாய்வுப் பணிக்கான தொடக்கமாகவும் அமைகின்றன. அவ்வகையில் தென்னிந்தியா முழுதும் இருந்த தாது வருட பஞ்சத்தைப் பற்றிய குறிப்புகளை இலக்கியக் கருவாகக்கொண்டுப் பாடப்பட்ட மேற்கண்ட நூல்கள் பல கோணங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டியவையாகும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. அழகிய சொக்கநாத பிள்ளை, திருநெல்வேலி காந்திமதியம்மை பேரில் கலித்துறை அந்தாதி, வெ.ப. சு. தமிழ்க்கலை ஆய்வு மையம், ம.தி.தா. இந்துக்கல்லூரி திருநெல்வேலி -10, 1990.
2. உ.வே.சா., புறநானூறு, உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், 2, அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை -600090. 2023
3. வில்லியப்ப பிள்ளை, பஞ்சலட்சண திருமுக விலாசம், ஸ்ரீ ராமசந்திர விலாசம் பிரஸ், குருசாமிக்கோனார் தெரு, மதுரை வடக்கு மாசி வீதி, 1932.
4. வில்லியம் டிக்பி,1877- தாது வருடப் பஞ்சம், கிழக்குப்பதிப்பகம், 2022.

© 2026 சிவலிங்கம் இரா. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..